முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்
நாள். 25.10.2025
O.S. 266 /2014
பிவா.சா.6 முருகன்
முதல் விசாரணை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது. நான் 18.08.2025ம் தேதியிலிருந்து நாகர்கோவில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நாகர்கோவில், வடிவீஸ்வரம் கிராம ரிசர்வே எண் p/24/140,141,143 ஆகிய புலஎண்களுக்கு சம்மபந்தபட்ட வருவாய் ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். p/24/140,,141,143 புல எண் யாருடைய பெயரில் உள்ளது என்றால் பார்வதி மகள் வசந்தா பெயரில் உள்ளது.

p/24/140,,141,143 ஆகியவற்றில் தற்போதைய புல எண் என்ன என்றால் p30/170 என்பது பார்வதி மகள் வசந்தா, மணி மனைவி சிவகாமி மகள் சதாசிவம், விஜயகுமார் மகன் விக்னேஷ் குமார் ஆகியோர் பெயரில் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எங்கள் அலுவலகத்தில் இருந்து4ம் பிரதிக்கு கொடுக்கபட்ட பதில் என்றால் சரிதான். அது பி,வா,சா, ஆ, 41 ஆகும். மேற்படி புல எண் களுக்குரிய ஆ பதிவேடு, சிட்டா நகல் ஆகியவற்றின் உ்ண்மை நகலை சாட்சி சான்றாவணம் 5 ஆக தாக்கல் செய்கிறேன் நான்ன தாக்ககல் செய்த ஆவணம் 1982 ற்கு பிறகு தயார் செய்த ஆவணமாகும். பட்டா ,சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்கள் 3 வருடத்திற்கு ஒருமுறை அழித்து விடுவோம். தற்போது அடங்கல் ஆவணம் தயார் செய்வதில்லை. 1433 பசலி வருடத்திற்குறிய வழக்கு சொத்திற்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ .30ல் 21.07.2015 ம்ததி 2 ம் பிரிதி விக்னேசின் பெயரில் சரிவே எண் p/24/140 உள்ளது என்றால் சரி. அதிலும் வீதம் என்றும் குறிப்பிட்டுள்ளதால் கூட்டுப்பட்டாவாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா புல எண்களுக்கு விக்னேசின் பெயர் எந்த ஆண்டு வந்தது என்றால் தற்போது கேட்கப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் புலங்கவில்லை. பட்டாவில் ஒரு நபரின் பெயரை சேர்க்கவேண்டும்

என்றால் தாசில்தார் அல்லது துணை வட்டாட்சியரின் செயல்முறை வேண்டும் என்றால் சரி. விக்னேசின் பெயர் சேர்க்கப்பட்டதற்கு எந்த தேதியில் என்ன ஆணையில் சேர்க்கப்பட்டது என்றால் 23.05.2023 ம் தேதியில் புல எண் 170,173 ல் சேர்க்கப்ப்பட்டது. வா.சாஆ. 8 ஆவணத்தில் p24/140,141,143 ல் கர ரசிதில் யார் பெயர் உள்ளது என்றால் மணி மனைவி சிவகாமி மகன் சதாசிவம் பெயர் உள்ளது. மற்றம் வீதம் என்று போட்டுள்ளதால் கூட்டு பட்டாவாக இருக்கலாம்.

வா.சாஆ 10 பட்டாவில் பெயர் சிவகாமி, சதாசிவம் மகன் மணி ஆகியோர்கள் பெயர் உள்ளது என்றால் சரி.